Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
UGC Approved by Transparent Peer Review

# சங்க இலக்கியங்களில் உமணர் இனக்குழு வாழ்வியல்

## *Socio-Economic Life of the Umāṇar Community in Sangam Literature*

**அ.சகாய சுசி[1,*], முனைவர் சு.இளமாறன்,[2]**

*[1] முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழாய்வு மையம், இலக்குமிபுரம்கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம் - 629 802, மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627 012, IN*

*[2] உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம், இலக்குமிபுரம்கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம் - 629 802,, IN*

***தொடர்புக்கு:** அ.சகாய சுசி — sahayasusijohnpaul@gmail.com

**ORCID:** அ.சகாய சுசி https://orcid.org/0009-0009-7244-734X; முனைவர் சு.இளமாறன், https://orcid.org/0000-0002-7559-5980



| பெறப்பட்டது | திருத்தப்பட்டது | ஏற்கப்பட்டது | வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 25 September 2026 | 26 September 2026 | 1 October 2026 | 2 October 2026 |
| கட்டுரை எண் MS26-QC54LN | DOI https://doi.org/10.63300/tm12052026.06 | தொகுதி / இதழ் தொகுதி 12, இதழ் 05 (October 2026) | P73-84 |



**சுருக்கம்**

சங்க இலக்கியங்களில் நெய்தல் நில மக்களின் வாழ்வியலோடு தொடர்புடைய இனக்குழுக்களில் உமணர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்கின்றனர். உப்பு உற்பத்தி, உப்பு விற்பனை மற்றும் பண்டமாற்று ஆகியவற்றை முதன்மைத் தொழில்களாகக் கொண்ட உமணர்களின் வாழ்வியல், அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை வெளிப்படுத்துகிறது. மேலும், பிற நில மக்களுடன் அவர்கள் மேற்கொண்ட பண்டமாற்று, வணிகத் தொடர்பு மற்றும் திணைக்கலப்பு உறவுகள் வழியாக உருவான சமூகப் பொருளாதாரத் தொடர்புகளும் எடுத்துரைக்கப்படுகின்றன. இதன்மூலம் உமணர்களின் வாழ்க்கை நிலையான குடியிருப்பை மையமாகக் கொண்டதாக அல்லாமல், தொழில், வணிகம், பயணம் மற்றும் பண்டமாற்றை அடிப்படையாகக் கொண்ட இயக்கமிக்க வாழ்வியலாக அமைந்திருந்தமை புலப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** உமணர்; இனக்குழு; நெய்தல் நிலம்; உப்பு உற்பத்தி; உப்பு வணிகம்; சகடம்; பண்டமாற்று; இடம்பெயர்வு; சங்க இலக்கியம்; வாழ்வியல்.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் சமூக அமைப்பு, தொழில், பொருளாதாரம், பண்பாடு, உறவுமுறை மற்றும் வாழ்வியல் கூறுகளை அறிந்துகொள்வதற்கான முதன்மையான இலக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. அவற்றுள் நெய்தல் நிலத்துடன் தொடர்புடைய உமணர்கள், உப்பு உற்பத்தி மற்றும் வணிகத்தில் சிறப்பிடம் பெற்ற இனக்குழுவினராகக் காணப்படுகின்றனர். கடல்நீரிலிருந்து உப்பை விளைவித்து, அதனை வண்டிகளிலும் படகுகளிலும் ஏற்றிச் சென்று உள்நாடுகளில் விற்பனை செய்தனர். இவ்வணிகப் பயணம் அவர்களைப் பல்வேறு நிலப்பகுதிகளோடும் பிற இனக்குழுக்களோடும் தொடர்புபடுத்தியது. இதனால் உமணர்களின் வாழ்வியல் தொழில் சார்ந்த இயக்கத்தன்மையையும் சமூகப் பொருளாதார உறவுகளையும் கொண்டதாக அமைந்தது. சங்கப் பாடல்களில் இடம்பெறும் உமணர்களைப் பற்றிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் இனக்குழு அடையாளம், வாழிடம், தொழில், பயணம், குடும்பம், உணவு, காதல்–திருமணம், விலங்குப் பயன்பாடு, நம்பிக்கைகள் மற்றும் பண்டமாற்று உறவுகள் ஆகியவற்றை இவ்வாய்வு ஆராய்கிறது.

**உமணர் – இனக்குழு அடையாளமும் தோற்றமும்**

உமணர்கள் மீன்பிடித்தொழில் மட்டுமின்றி உப்பெடுக்கும் தொழிலும் செய்தனர்.இதை மதுரைக்காஞ்சி, நற்றிணை, அகநானூறு போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. பெரிய வண்டியில் உப்பை மட்டுமின்றித் தம் வீட்டுச் சாமான்களையும் ஏற்றிக் கொண்டு உள்நாடுகளில் நெடுந்தொலைவு சென்று விற்பவர்கள் உமணர்களாவர். உமணப் பெண்ணே வண்டியை ஓட்டிக்கொண்டு நடந்து செல்வர். மாடுகள் பயனற்றுப் போகும் போது நடுக்காட்டிலேயே அவற்றை விட்டுச் செல்வர். படகில் உப்பினை ஏற்றிச் சென்று விற்றனர்.வருகையில் படகு நிறைய வெண்ணெல் நிரம்பி இருந்தது என்பதற்கானத் தரவுகள் சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகிறது.

**உமணரின் வாழிட அமைப்பும் இடம்பெயர்வு வாழ்வியலும்**

உப்பு வணிகராகிய உமணர் கூட்டம் நிலையான இருப்பிடத்தை அற்றவர்களாகவே சங்க இலக்கியம் சுட்டுகிறது. அவர்கள் கூட்டம் கூட்டமாகவே சென்று தங்கி உப்பு விற்றுக் காட்டுப்பகுதியில் வாழ்ந்தனர் என்பதை

**“உமணர் சேர்ந்துகழிந்த மருங்கின், அகன்தலை**

**ஊர்பாழ்த் தன்ன ஓமைஅம் பெருங்காக” (குறுந்124-1-2)**

எனும் குறுந்தொகைப் பாடல் விளக்கமளிக்கிறதை இப்பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

மேலும்,

பரல் கற்கள் நிறைந்த வழிகளில் உப்பு வணிகரது சிறிய குடியிருப்புகள் ஓங்கி உயர்ந்து இருந்தது என்பதை நற்றிணை வரிகள் சுட்டிக் காட்டுகிறது.

**“முரம்புதலை மந்த நிரம்பா இயலின்**

**ஓங்கித் தோன்றும் உமண்பொலி சிறுகுடிக்” (நற் 374:1-2)**

எனும் பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

உழாது விளைவிக்கும் உப்பினை வணிகர் விற்பனைக்குக் கடற்கரைச் சோலையில் குவித்து வைப்பர். பறவைகளை விரட்டும் தோழியர் அக்குவியலின் மீதேறி எம்தந்தையின் படகு இது, உன் தந்தையின் படகு இது என்று கடற்பரப்பில் மீன் வேட்டைக்குச் செல்லும் சுற்றத்தாரின் படகுகளை எண்ணுவர். இதனை நற்றிணைப் பாடல் இங்ஙனம் வெளிக்காட்டுகிறது.

**“உவர்வினை உப்பின் உழாஅ உழவர்**

**ஒழுகை உமணர் வருபதம் நோக்கி**

**மூகானல் இட்ட காவற் குப்பைப்**

**புலவுமீன் உணங்கல் படுபுள் ஒப்பி**

**மடநோக்கு ஆயமொரு உடன்ஊர்பு ஏறி**

**எந்தை திமில் இது நுந்தை திமில் என**

**வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்**

**திண்திமில் எண்ணும் தண்கடற் சேர்ப்பர்”(நற் 331 1-8)**

என்னும் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

**உமணரின் உப்பு உற்பத்தித் தொழில்நுட்பம்**

பெரிய உப்பங்கழியில் வெள்ளை உப்பு விளைந்தமையை மதுரைக்காஞ்சி புலப்படுத்துகிறது.இதனை,

**“இருங்கழிச் செறுவின் வெள்உப்புப் பகர்நரொடு” (மதுரைக்- 117)**

காய உப்பங்கழிக்கு அருகில் அமைந்த பாத்தியில் விளைந்த வெள்ளை உப்பு எனும் மதுரைக் காஞ்சிப் பாடல் வழியாக உமணரின் தொழில் வெளிக்கொணரப்படுகிறது.

**உப்பு விளைவித்தல்**

பரதவர் உப்பினை ஏரால் உழுவதன்றிக் கையால் பாத்தி கட்டி விளைவிப்பர். இதனை,

**“உவர்வினை உப்பின் உழாஅ உழவர்” (நற் 331-1)**

என்னும் நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது.

மேலும்,

பரதவர் உப்பளத்தில் சிறு சிறு பாத்திகளில் உப்பினை விளைவிப்பர். நேராக வகுக்கப்பட்ட சிறுசிறு பாத்திகளில் கடல் நீரைப் பாய்ச்சி உப்பு விளைவிப்பர். இதனை,

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**“நேர்கட் சிறுதடி நீரின் மாற்றி**

**வானம் வேண்டா வாழ்வின்எம்**

**கானலஞ் சிறுகுடி” (நற் 254 10-13)**

என்னும் நற்றிணை வரிகள் புலப்படுத்துகிறது.

**உப்பு விற்றல்**

பரதவர் விளைவித்த உப்பினை உப்பு வணிகரிடம் விற்பர். அவ்வணிகர் உப்பினைத் தொகுத்து விற்று மாற்றாக வெண்ணெல் பெறுவர்.

உவர் நிலத்தில் விளைந்த உப்பினை விலைகூறி நெடுந்தொலைவில் உள்ள இடங்களுக்குச் செல்லும் உப்பு வணிகர். இதனை,

**“உவர்வினை உப்பின் கொள்ளை சாற்றி**

**அதர்படு பூழிய சேண்புலம் படரும்**

**ததர்கோல் உமணர் பதிபோகு நெடுநெறி” (அகம் 390-1-3)**

என்னும் அகநானூற்றுப் பாடல் வழியாக அறிய முடிகிறது.

**உமணரின் வண்டி– சகடம்**

**“சக்கரங்களில் நகர்ந்த**

**---------- கானற்**

**கழி உப்பு முகந்து கவ் நாடு மடுக்கும்**

**ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும் (புறம் 60 -6-8)**

கடற்கரைக் கழிமுகத்திலுள்ள நீரால் விளைந்த உப்பினைச் சுமந்து மலைநாடு நோக்கிச் செல்லும் ஆரக்கால்கள் அமைந்த வண்டி, அதனைப் பள்ளத்தில் ஆழ்ந்துவிடாதபடி வலிமையுடையதும் சுமை தாங்குவதுமான காளை இழுத்துச் செல்லும் என்பதை

**எருதே இளைய நுகம் உணராவே**

**சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே**

**அவல் இழியினும் மிசை ஏறினும் (புறம் 102 – 1-3)**

இளைய எருதுகள் வண்டியில் நுகம் பூட்டி இழுத்தலை அறியா அவ்வண்டியில் உப்பாகிய பண்டம் அதிகமாக ஏற்றப்பட்டது. அவ்வண்டி பள்ளத்தே சென்றாலும், மேட்டிலே ஏறியாலும் அவ்விடத்தில் வரும் இடையூறை நினைந்து உப்புவாணிகர் அச்சுமரத்தின் கண்ணே காவலாகிய சேமஅச்சைச் சேர்த்துக் கட்டியிருப்பர் என்பதை

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**காவங் சகாடு கைப்போன் மாணின்**

**ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே (புறம் 185-2-3)**

வண்டியைச் செலுத்துவோன் திறம் பெற்றவனாயின் வண்டி இடையூறு சிறிதுமின்றி இனிதாகச் செலுத்துவான் என்பதை

**கலம் செய் கோவே கலம் செய் கோவே!**

**அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய**

**சிறு வெண் பல்லி போல …..(புறம் 256 1-3)**

**சகடம்**

பருகுவதற்கு நீரும்,உண்பதற்குப் புல்லும் தாராமல், உப்பு வாணிகர்கள் மக்கள் இயக்கம் இல்லாத ஒருபுறத்தே முடம்பட்டமை கரணமாக விட்டு நீங்கிய உயிர் வாழாத வலிய காளையினைப் போலக் கிடந்து என்பதை

**“நீரும் புல்லும் ஈயாது, உமணர்**

**யாரும்இல் ஒருசிறை முடத்தொடு துறந்த**

**வாழா வான்பகடு ஏய்ப்ப, (புறம் 307- 7-9)**

**மேலும்,**

**“----------**

**உமணர் வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி,**

**கணநிரை கிளர்க்கும் நெடு நெறிச் சகடம்**

**மணல்மடுத்து உரறும் ஓசை கழனிக்**

**கருங்கால் வெண் குருகு வெரூஉம்**

**கழிச் சேர்ப்பின் தம் உறைவின் ஊர்க்கே? (நற் 4 -7-12)**

உப்பு வாணிகர் வெண்மையான கல்லுப்பின் விலை கூறிக் கூட்டமாகிய ஆனிரையை ஒலியெழுப்பிப் போகச் செய்யும் வழியில் செல்லும் வண்டிகள் மணல் பரப்பில் மடுத்து முழங்கும் ஓசையைக் கேட்டு வயல்களில் உள்ள கருங்கால் வெண்குருகுகள் அஞ்சுகின்ற கரிய உப்பங்கழி சூழ்ந்த நெய்தல் நிலம் என்பதை,

**இருங்கரை நின்ற உப்பு ஒய் சகடம்**

**பெரும்பெயல் தலைய வீஇந்தாங்கு, (குறுந்165-3-4)**

சகடத்தில் ஏற்றப்பட்ட உப்பு, பெருமழையால் சிறுகச் சிறுகக் கரைந்து,அழிந்து, பின் இல்லாது போகும்.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**“வேற்றுமுனை வெம்மையின், சாத்துவந்து இறுத்தென” (குறுந் 390-3)**

வணிகர்கள் கூட்டமாகச் செல்லுதல் வணிகச் சாத்து எனப்படும். ஆறலை கள்வர் பாலை வழியில் செல்லும் வணிகர்களைக் கொன்று அவர்களுடைய பொருள்களைக் கவர்வர்.

**“நீர்வாழ்முதலை ஆவித் தன்ன**

**ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து” (அகம் 6-7)**

ஒலிக்கின்றவாளையுடைய சகடத்துச் செல்லும் உமணரும் பண்டமாற்று முறையும் உப்புக்கு மாற்றாகப் பெறப்பட்டபொருட்கள் பண்டமாற்றின் சமூகப் பொருளாதாரப் பரிமாணமும், வண்டிப் பயணமும் சமூகத் தொடர்புகளும் பிற இனக்குழுக்களுடனான தொடர்பு சந்தைகள், குடியிருப்புகள், வணிக உறவுகள் உருவாக்கின.

**உமணர் குடியிலுள்ள சிறுவர் – சிறுமியரின் வாழ்வியல்**

உமணர் குடியில் தோன்றிய சிறுமகள் “ நெல்லின்நேரே வெண்கல் உப்பு” என்று கூவுகின்ற போது இல்லங்கள் நிறைந்த புதிய ஊரில் வேற்றவர் வரவைக் கண்ட நாய் குரைக்க அவள் அஞ்சினாள் என்பதை

**“நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**

**சேரி விலைமாறு கூறவின் மனைய**

**விளியறி ஞமலி குரைப்ப வெரீஇய**

**மதர்கயல் மலைப்பின் அன்னகண் எமக்கு” அகம் 140**

என்னும் அகநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

மேலும்,

உப்பு விற்கும் வணிகரின் வண்டிகளின் பின்னால் அவர்கள் குழந்தைகளும் சென்றனர். உமணர் பெண்டிர் குழந்தைகளுடன் கிலுகிலுப்பையைக் கொண்டு விளையாடினர் என்பதை

**“வளர்இயல் ஐம்பால உமட்டியர் ஈன்ற**

**கிளிர்பூண் புதல்வரொடு கிலுகிலு ஆடும்” (சிறு 60-61)**

என்னும் சிறுபாணாற்றுப்படைப் பாடல் வரிகள் உமணக்குடி சிறுவர்களைப் பற்றிய செய்தியை விளக்குகிறது.

**உமணரின் உணவு மற்றும் அன்றாட வாழ்வியல்**

வண்டி ஓரங்களில் அமைத்து துளைகளில் மர உரல்களை கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். வாரால் நன்கு இறுக்கிக் கட்டப்பட்ட முழவைப்போல காடி (ஊறுகாய்) வைத்து மிடா அசையாதவாறு கயிற்றால் வரிந்து கட்டப்பட்டிருந்தது (காடி - ஊறுகாய்) என நச்சினார்க்கினியர் உரை கூறுவதாக முனைவர் ராஜ் கௌதமன் (2006, ப. 205) கூறுகின்றார்.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

உப்பு விற்று வாங்கி வந்த நெல்லாலே ஆக்கப்பட்ட மூரலாகிய வெண்சோற்றை அயிரை மீனை இட்டு ஆக்கிய சுவை மிகுந்த புளிங்கறியை அதிலே ஊற்றிக் கொழுமீன் கருவாட்டுடன் தன் தந்தைக்குப் பரிமாறினாள் என்பதை

**“உப்பு நொடை நெல்லின் மூரல் வெண் சோறு**

**அயிரை துழந்த அம்புளிச் சொரித்து,**

**கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்” (அகம் 60 – 4-6)**

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

உமணர் கூட்டம் தீக்கடை கோலால் உண்டாக்கிய சிறுதீயில் ஊனை வாட்டி சுனையிலிருந்து கொண்டு வந்த நீர் கொண்டு ஏற்றிய உலையில் போட்டு ஒன்றுகூட்டி ஊன்சோறு ஆக்குவர் என்பதை

**“ஞெலிகோற் சிறுதீ மாட்டி, ஒலிதிரைக்**

**கடல்வினை அமிழ்தின் கணம்சால் உமணர்**

**சுனைகொள் தீம்நீர்ச் சோற்று உலைக் காட்டும்**

**சுரம்பல கடந்த நம்வயின் படர்ந்து” (அகம் 169 – 5-7)**

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

உப்பு வணிகர்க்குத் தீமூட்டும் சுள்ளியாக யானை சமைத்து மீதம் வைத்த யாமரத்தின் சக்கை பயன்பட்டது. என்பதை

**“களிறு சுவைத் திட்ட கோதுடைத் ததரல்**

**கல்லா உமணர்க்குத் தீமுட்டு ஆகும்” (அகம் 257 – 16-17)**

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

**உமணரின் காதல் வாழ்வியல்**

**“நெல்லின் நேரே வெண்ணெல் உப்பு” (அகம் 140)**

உமணர்குடிச் சிறுமகளிர் புதியவர் வரவைக் கண்டு மருள்கின்ற கண்களையுடைய தலைவியிடம் தலைவன் காதல் கொள்கின்றான். அவளது காதலைப் பெற தலைவன், தலைவியின் தந்தை படகில் ஏறி மீன் பிடித்தும், அவனுக்குத் தொண்டுச் செய்தும் வாழ்ந்தான் என்பதையும், அங்கேயே தங்கி உப்பங்கழிகளை அடுத்த களர் நிலத்தில் விளையும் உப்பை வண்டியில் ஏற்றுதல் போன்ற செயலைச் செய்தால் தன்னுடைய நேர்மைப் பண்பைக் கருதி தலைவியைத் தனக்கு திருமணம் செய்துத் தருவார் எனத் தலைவன் எண்ணியதை அகநானூறு சுட்டிக் காட்டுகிறது.

**திணைக்கலப்பும் உமணரின் திருமண உறவுகளும்**

உமணரின் அன்பு மகள் சேரியில் வளை ஒலிக்க, ஒரு கை வீசி நடந்து உப்பு விற்றாள். அவளைக் கண்டு குறிஞ்சி நிலத்துக் குறவன் காதல் கொண்டான். என்பதை

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**“கதழ்கோல் உமணர் காதல் மடமகள்**

**சில்கோல் எல்வனை தெளிர்ப்ப வீசி**

**நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்**

**சேரி விலைமாறு கூறலின், மனைய**

**விளிஅறி ஞமலி குரைப்ப, வெரீஇய” (அகம் 140)**

என்னும் பாடல் வரிகள் தெரியப்படுத்துகிறது.

**மேலும்,**

உப்பு விற்க சென்ற உமண்மகளைக் கண்டு காதல் கொண்டு தடுத்து நிறுத்தி, முல்லைநிலத் தலைவன் காதல் செய்தமையை,

**“நெல்லும் உப்பும் நேரே, ஏரீர்**

**கொள்ளீ ரோஎனச் சேரிதொறும் நுவலும்**

**அவ்வாங்கு உந்தி அமைத்தோ ளாய், நின்**

**மெய்வாழ் உப்பின் விலைஎய் யாம் எனச்**

**சிறிய விலங்கின மாக பெரியதன்**

**அரிவேய் உண்கண் அமர்த்தனள் நோக்கி**

**யாரீரோஎம் விலங்கி யீஇர்என**

**மூரல் முறுவலள் பேர்வனள் நின்ற**

**சில்நிரை வால்வளைப் பொலிந்த**

**பல்மாண் போதைக்கு ஒழிந்தது என் நெஞ்சே” (அகம் 390)**

என்னும் அகநானூற்றுப் பாடல் வழியாக உமணர் மகள் உப்பு விற்கச் செல்லும் போது வேற்று நிலத் தலைவன் அவள்பால் காதல் கொண்டு மணந்தமைக் கூறப்பட்டுள்ளமையால் சங்க இலக்கியத்தில் திணைக் கலப்பு திருமணம் நடந்தேறியமையை அறியமுடிகிறது.

**பயணம்**

உப்பு வணிகர் சமைத்து விட்டுப்போன அடுப்பில் ஊன் கலந்த உணவைச் சமைத்து மறவர் உண்டனர் என்பதை

உப்பு வணிகர் உப்பங்கழியில் விளைந்த உப்பை ஏற்றிச் சென்று விற்று வண்டிகளின் காளைகளை மேயவிட்டு தாங்களும் இளைப்பாறினார்கள் என்பதை

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**“தென்கழி விளைந்த வெண்கல் உப்பின்**

**கொள்ளை சுற்றி கொடுநுக ஒழுகை**

**உரனுடையச் சுவல பகடுபல பரப்ப” (அகம் 159-1-3)**

என்னும் வரிகள் உணர்த்துகிறது.

உப்பு வணிகர் உப்பங்கழியில் விளைந்த உப்பை ஏற்றிச் சென்று விற்று வண்டிகளின் காளைகளை மேயவிட்டு தாங்களும் இளைப்பாறினார்கள். என்பதை

**“தென்கழி விளைந்த வெண்கல் உப்பின்**

**கொள்ளை சுற்றிய கொடநுக ஒழுகை**

**உரனுடையச் சுவல பகடுபல பரப்பி” –(அகம் 159-1-3)**

என்னும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

உப்பு வணிகரது கழுதைக் கூட்டம் குறும்பாறைகளைக் கொண்ட பாலைவழியில் பயணம் செய்தது என்பதை

**“அவணது ஆக பொருள் என்று, உமணர்**

**கணநிரை அன்ன, பல்கால் குறும்பொறை” (அகம் 337 – 5-6)**

உப்பு வணிகரால் புல்லும் நீரும் இல்லாதது தனித்து விடப்படும் எருதுகள். பாலை வழியில் பயணம் மேற்கொள்ளும் போது வண்டி இழுக்கும் எருதுகள் வலுவிழந்தால் அவற்றை அங்கேயே இட்டுச் செல்வர் என்பதை

**“நீரும் புல்லும் ஈயாது உமணர்” (புறம் 307-7)**

என்னும் பாடல் வரிகள் மூலம் உமணரின் பயணங்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

**உமணர் பயன்படுத்திய விலங்குகள்**

உமணர் வாணிபம் மேற்கொள்ளும் போது ஆநிரை, காளை, கழுதை, எருது போன்ற விலங்குகளைத் தான் பயன்படுத்திய வண்டிகளில் பூட்டிப் பொதிச் சுமக்க செய்தான் என்பதை சங்க இலக்கியப் பாடல்கள் தெளிவுபடுத்துகிறது.

**காளை**

உமணர் நுகத்திற் பூட்டிய காளைகளை அவிழ்த்து மேயவிட்டுத் தாமும் சோர்வாற்ற இளைப்பாறிச் சென்றமையையும், உப்பு விற்கும் வணிகர்கள் கடற்கரையில் வண்டிகளில் பூட்டப் பெற்றிருக்கும் காளைகள் மிகவும் வலிமையுடையது என்பதையும்

**“உப்பு ஒய் உமணர் அருந்துறை போக்கும்**

**ஒழுகை நோன்பகடு ஒப்பக்….” (அகம் 30-5-6)**

என்னும் அகநானூற்றுப் பாடல் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**கழுதை**

**உப்பு வணிகரின் பொதிகளைக் கழுதை சுமந்து சென்றதை,**

**“…… உமணர்**

**கணநிலை அன்ன……” (அகம் 337-5-6)**

உப்பை ஏற்றிச் செல்லும் உமணர் எருதுகள் இளைப்பாற நிலத்தை உடைத்து கிணறு உண்டாக்கிச் சென்றனர் என்பதை

**“கடல்நீர் உப்பின் கணம்சால் உமணர்**

**உயங்குபகடு உயிர்ப்ப அசைஇ இரம்பு இடித்து**

**அகல்இடம் குழித்த அகல்வாய்க் கூவல்” (அகம் 295 9-11)**

என்னும் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

**மந்தி**

கொற்கை நகரத்து உப்பு விற்கும் உமணர் தம் குழந்தைகளோடு, குழந்தையாகக் கருதிப் பெண் குரங்குகளையும் (மந்தி) வளர்த்தனர்.என்பதை

**“நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த**

**மகாஅர் அன்ன மந்தி, மடவோர்” (சிறு 55-56)**

**எருது**

உப்பு மூட்டையை வண்டியில் ஏற்றிச் செல்ல எருதினைப் பயன்படுத்தினர் என்பதை

உப்பு மூட்டையை வண்டியில் ஏற்றிச் செல்ல எருதினைப் பயன்படுத்தினர் என்பதை

**“உப்பு ஒய் உமணர் அருந்துறை போக்கம்**

**ஒழுகை நோன் பகடு ஒப்பக் குழீஇ” (அகம் 30 -5-6)**

வண்டிகளில் தளர்ச்சியற்ற வலிமையான கால்களைக் கொண்ட சிறந்த எருதுகள் இழுத்துக் கொண்டு காட்டு வழியினைக் கடந்து செல்வர்.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**“ஊர்காண் பன்ன ஆரம் வாங்கி**

**அருஞ்சுரம் இவர்ந்த அசைவுஇல் நோன்தாள்**

**திருந்துபகட்டு இயம்பும் கொடுமணி, புரிந்துஅவர்” (அகம் 191 – 5-7)**

உப்புச் சுமையினை இழுத்து வருந்திய எருதுகள் இளைப்பாறும் பொருட்டு ஓரிடத்தே தங்கிய உமணர்கள் அவ்விடத்து வலிய நிலத்தை அடித்துத் தோண்டின அகன்ற வாயினையுடைய கிணறு நன்கு ஊரில் வழிச் செல்வார்கள் நீர் வேட்கையாலான தளர்ச்சியினை நீக்கியது.

**“உயங்குபகடு உயிர்ப்ப அசைஇ, முரம்பு**

**இடித்து அகல்இடம் குழித்த அகல்வாய்க் கூவல்” அகம் 295 10-11)**

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

**சடங்குகளும் நல்நிமித்தமும்**

சடங்கு முறை என்பது நம்பிக்கை என்பதன் அடிப்படையில் தோன்றியது சடங்கு முறைகள் உமணரும் பண்டமாற்றிற்கு செல்லும் முன் நிமித்தம் பார்த்தனர்.

அச்சத்தை தரக்கூடிய கடல் நீரினால் உவர் நிலத்தில் பாத்துகட்டி நீர் பாய்ச்சி வெயிலில் காய்ந்து உப்பாக விளையும் உப்பை விற்பனை செய்யும் உமணர் உப்பை விற்பதற்கு முன் நல்நிமித்தம் பார்த்தனர். என்பதை

**“இணங்குடை முந்நீர் பரந்த செறுவின்**

**உணங்குதிறம் பெயர்ந்த வெய்கல் அமிழ்தம்**

**குடபுல மருங்கின் உய்ம்மார்” (அகம் 207 -1-3)**

என்னும் அகநானூற்றுப் பாடல் வழி அறியலாம்.

**உமணரும் பிற இனக்குழுக்களும் – சமூகப் பொருளாதார உறவுகள்**

ஒவ்வொரு நிலங்களிலும் வெவ்வேறு விதமான பண்டமாற்று முறை இருந்தது. தங்கள் நிலத்தில் விளைந்த விளைபொருட்களை மற்ற நிலங்களுக்குக் கொடுத்து பண்டமாற்று செய்தமையை,

**“தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்**

**மீன் நெய்யோடு நிறவு மறுகவும்**

**தீங் கரும்பொடு அவ் வகுத்தோர்**

**மான் குறையோடு மது மறுகவும்” (பொருந 214-217)**

என்னும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

பிற நிலங்களில் விளையும் பொருட்களைப் பண்டமாற்றாக பெற்று அதற்கு ஈடாக உப்பினைக் கொடுக்கும் போது பிற நிலங்களின் பண்பாடும் பழக்கவழக்கமும் உமணரோடு ஒன்றிப்போயிருக்கும். நிலையில்லாத வாழ்க்கை வாழும் இவர்களுக்கு பிற நிலங்களில் தங்கி ஓய்வெடுத்து செல்லவும் எளிமையான வழியாக இந்த பண்டமாற்று முறை உதவியது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**முடிவுரை**

சங்க இலக்கியப் பதிவுகளின் வழியாக உமணர்களின் வாழ்வியலை ஆராயும்போது, அவர்கள் நெய்தல் நிலத்தின் உப்பு உற்பத்தி மற்றும் வணிகத்துடன் நெருங்கிய தொடர்புடைய தனித்துவமான இனக்குழுவாக விளங்கியமை தெரியவருகிறது. உப்பை உற்பத்தி செய்தல், விலை கூறி விற்றல், வண்டி மற்றும் படகு வழியாக நீண்ட தொலைவு பயணம் செய்தல் ஆகியவை அவர்களின் பொருளாதார வாழ்வின் அடிப்படைகளாக அமைந்திருந்தன. நிலையான குடியிருப்பை விடக் கூட்டமாக இடம்பெயர்ந்து வாழும் தன்மை அவர்களின் வாழ்க்கையில் காணப்படுகிறது. சகடம், காளை, எருது, கழுதை போன்றவற்றின் பயன்பாடு அவர்களின் வணிகப் பயணத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது. உமணர்களின் வாழ்க்கை தொழில் சார்ந்ததாக மட்டுமல்லாமல், குடும்பம், குழந்தைகள், உணவு, காதல், திருமணம், சடங்கு, நல்நிமித்தம் போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளையும் உள்ளடக்கியிருந்தது. குறிப்பாக, பிற திணை மக்களுடன் ஏற்பட்ட காதல் மற்றும் திருமண உறவுகள் திணைக்கலப்பையும் சமூகத் தொடர்புகளையும் வெளிப்படுத்துகின்றன. மேலும், உப்புக்கு மாற்றாக நெல் மற்றும் பிற நிலப்பொருட்களைப் பெற்ற பண்டமாற்று முறை, பல்வேறு நில மக்களுக்கிடையிலான பொருளாதாரப் பரிமாற்றத்தையும் பண்பாட்டுத் தொடர்பையும் உருவாக்கியது. எனவே, சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள உமணர் வாழ்வியல், தொழில், வணிகம், பயணம், உறவுமுறை, நம்பிக்கை மற்றும் பண்டமாற்று ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய இயக்கமிக்க சமூக வாழ்வியலாகக் காணப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1.நாகராசன், வி. *குறுந்தொகை: பாகம் 1, 2 – மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2004.

2.பாலசுப்பிரமணியம், கு. வெ. *நற்றிணை: மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2004.

3.பாலசுப்பிரமணியம், கு. வெ. *புறநானூறு: பாகம் 1, 2 – மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2004.

4.செயபால், இரா. *அகநானூறு: பாகம் 1, 2 – மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2004.

5.மோகன், இரா. *பத்துப்பாட்டு: பாகம் 1, 2 – மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2004.

© 2026 அ.சகாய சுசி, முனைவர் சு.இளமாறன்,. https://creativecommons.org/licenses/by/4.0 வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..